DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.41/2025

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முத்துக்குமார் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused produced.)
26. 02.2026 at 04.00 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவிலாங்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 27.01.2025ம் தேதியன்று காலை 09.00 மணியளவில் சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவரிலன் பேரில் என்னுடன் வந்த முதல் நிலைக்காவலர் 449 திரு.உதயசங்கர் மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன் ஆகியோர் சகிதம் சிக்கல் டாஸ்மாக் அருகே ரோந்து சென்ற போது அங்கே சந்தேகப்படும் படியாக நின்ற பூலாங்குளத்தை சேர்ந்த காந்தி மகன் ரமேஷ் என்பவர் ஓட எத்தனித்தவரை பிடித்து சோதனை செய்த போது அவரிடம் 180 ML அளவுள்ள Old Chef என்ற லேபிளுடன் கூடிய 44 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்தது. சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் முதல் நிலைக்காவலர் 449 திரு.உதயசங்கர் மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து 44 மதுபாட்டில்களுன் கைப்பற்றி எதிரியையும் கைது செய்தேன். பின்னர் எதிரிகள் சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நிலையக்குற்ற எண். 7/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.

3. எதிரியை நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் 44 மதுபாட்டில்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.3 ஆகும். 44 மதுபாட்டில்களை காண்பிக்கக்கூடிய புகைப்படம் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் சாட்சிகள் முதல் நிலைக்காவலர் 449

திரு.உதயசங்கர் மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரி ரமேஷ் மீது பிரிவு 4(1) (C) TNP Amendment Act 2024 ன் கீழ் அன்றே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு வழக்கமான ரோந்து பணியில் சென்றோமா அல்லது தகவல் கிடைத்த பேரில் சென்றோமோ என்றால் வழக்கமான ரோந்து பணியில் சென்றோம். எதியிடம் இருந்து எந்த பையில் இருந்து மதுபாட்டில்களை கைப்பற்றினோம் என்றால் எதிரியிடம் பை எதுவும் இல்லை. டாஸ்மாக் அருகே உள்ள முட்புதரில் மதுபாட்டில்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். நான சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் இருந்தது குறித்து காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கும என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மதுபாட்டில்களை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பினோன என்றால் இல்லை. இந்த வழக்கில் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சியானது வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக மேலகதிகாரியின் உத்தரவின் பேரில் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி